بسم الله الرحمن الرحيم

**Friday Sermon / வெள்ளிக்கிழமை குத்து∴பா 18/11/2016**

**(17 Safar 1438 HIJRI)**

## “USURY”

## “கொடிய வட்டி”



**Hazrat Khalifathullah Munir Ahmad Azim (A)**

உலகெங்குமுள்ள தன் தோழர்களுக்கும், மற்றனைத்து முஸ்லீம் மக்களுக்கும் சலாம் தெரியப்படுத்திய பிறகு தஷஹ்ஹுதும் தஅவதும், அல்∴பாத்திஹாவும் ஓதிக் கொண்டு ஹஸ்ரத் கலீ∴பத்துல்லாஹ் முனீர் அஹமது அஸீம் (அலை) அவர்கள் கீழ் வருமாறு உரையாற்றினார்.

**“ஈமான் கொண்டோரே! இரட்டித்துக் கொண்டே அதிகரித்த நிலையில் வட்டி (வாங்கித்) திண்ணாதிர்கள். இன்னும் நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சி (இதைத் தவிர்த்துக் கொண்டால்) வெற்றியடைவீர்கள்”**

(ஆல இம்ரான் 3.131)

**“யார் வட்டி (வாங்கித்) தின்கின்றார்களோ அவர்கள் (மறுமையில்) ஷைத்தானால் தீண்டப்பட்ட ஒருவன் பைத்தியம் பிடித்தவனாக எழுவது போலல்லாமல் எழ மாட்டார்கள்”**

(அல் பகரா 2.276)

வட்டி என்ற வார்த்தையை மிக தெளிவாக விளக்கி கொண்டால் கடன் வாங்கும் பணத்தின் தேவைக்கேற்ப பணம் கொடுப்பவர்கள் பணத்தின் மதிப்பினை கூட்டு சதி மூலம் நிர்ணயித்தல் ஆகும். அவ்வாறு, சதாரண பயன்பாட்டை விட அதிகமான பணம் கடன் வாங்குவோர்கள் வன்முறைக் காரணமாக அதை செலுத்த நேரிகின்றது. எனவே, வன் முறை என்ற வார்த்தை, கடன் கொடுத்த பணத்திற்கு கொடிய வட்டி வாங்குவதை குறிப்பிடுகின்றது.

மானிட குலத்திடம் ஒரு விஷயத்தை நான் மேலும் கூறுகின்றேன். குறிப்பாக, முஸ்லீம்களிடம் - சட்டத்திற்கு மாறாக பணம் மற்றும் கொடிய வட்டியில் ஈடுப்பட்டு கொள்போர்கள் கடுமையான தண்டணைகளுக்கு ஆளாக்கப்படுவார்கள். சட்டத்திற்கு ஏதிரான பணம் என்றால், லஞ்சம், திருட்டு வகையான பண ஏற்பாடு, சூதாட்டம், வாங்கி வட்டி போன்றவைகள். இஸ்லாமத போததைகளின் படி லாபம் என்றால் அயராத உழைப்பு வழியாக சேர்த்துக் கொள்ளும் பணம் ஆகும்.

ஒரு முறை ஒரு சஹாபி தூய தூதர் (ஸல்) விடத்தில் வினவினார்.

**“யா ரசூலல்லாஹ், நேர்மையான சம்பத்தியம் என்றால் என்ன?**

**ரசூல் (ஸல்) அவர்கள் பதிலளித்தார்.**

**“எவர் ஒருவர் அவரது கரங்களால் அயராத உழைத்து சேர்த்து, அதை சட்டத்திற்கு உட்ப்பட்ட வகையில் பயண்டுத்திக் கொள்ளவும் செய்வதே நேர்மையான சம்பத்தியம்”**

அரபி நாட்டில் முஸ்ரீக்கீங்கள் ஏழைகளை ஓடுக்கி அதிக வட்டி வாங்கி வந்தனர். ஆனால் இஸ்லா மதத்தை அவர்கள் தழுவிக் கொண்ட பிறகு, அந்த வட்டி வாங்குதல் வழக்கத்தை தவிர்த்துக் கொள்ள அவர்களை ஆளாக்கிக் கொண்ட இறை வெளிப்பாடு வசனம் இதுவாகும்.

**“ஈமான் கொண்டவர்ளே! நீங்கள் உண்மையாக மு.ஃ.மின்களாக இருந்தால் அல்லாஹ்வுக்கு அஞ்சியடங்கி, எஞ்சியுள்ள வட்டியை வாங்காது விட்டு விடுங்கள்”**

(அல்பக்ரா 2.279)

அதிகமளவிலான பண தட்டு பாடு ஏற்பட்ட போதிலும், தங்களின் சுய விருப்பத்தை தவிர்த்துக் கொண்டு அல்லாஹ்வின் திருப்தியை மட்டும் நாடி அவர்கள்

வட்டி வாங்குதலை கைவிட்டு விட்டனர். கொடிய வட்டி வாயிலாக நம்மை சாத்தான் நிந்தையின் பால் கொண்டு செல்கின்றது. அல்லாஹ்வின் பார்வையில் நிந்தை எதுவோ அதுவே நம் பார்வையிலும் நிந்தையாக இருக்க வேண்டும். எனவே நாமும் அல்லாஹ்வின் விருப்பத்திற்கு ஏற்றவார் வாழ்ந்தால் அவனுக்கு விருப்பமில்லாத வையிலிருந்து நம்மை பாதுகாத்து, அருளி, சரியான முறையில் முன்னேற்றமடைய வழி வகுப்பான். ஆமீன்.

**Issued by:**

**Jamaat Ul sahih Al Islam Dawa Department**

**Tamil Nadu, India (Regd. No. A/693)**

**Web: www.jamaat-ul-sahih-al-islam.com**

**Translated by:**

**Azim Ahmad**

**E-mail: azimahmad070@gmail.com**

**Cell: 9789180817.**